திரு. க. இராமமூர்த்தி : கேட்ட கேள்வியின் ஒரு பகுதிக்குத் தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். ஒரு பகுதி மக்கள் குழுவில் இடம் பெறுவது பற்றியது. வளர்ச்சி மன்றத்தைப் பொறுத்தவரை, இரண்டு வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒன்றில்தான் கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுகின்றனர். தெற்கு வளர்ச்சி மன்றத்திற்கு அழைப்பு வரவில்லை. அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆரம்பத்திலேயே நான் இதற்கு பதிலளித்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மன்றங்களிலும் இடம் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

Transfers of Panchayat Union Teachers

* 8 *Q*.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state--

(*a*) whether the Government have received around 5th June 1978 any petition from the State General Secretary of the Teachers' Association requesting to avoid the intervention of the representa- of both the party and the public in the transfers of the Panchayat Teachers ; and

(*b*) if so, the action taken thereon?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்களில் பொது மக்களின் பிரதிநிதிகள், மற்றும் கட்சிப் பிரதிநிதிகளின் தலையீடுகளைத் தவிர்த்திட வேண்டி, ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளரிடமிருந்து 5-6-1978ஆம் நாளளவில் விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் ; கேள்வியிலே உள்ள வாசகத்திற்கு கேற்ப, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரி

ஷித்துக் கொள்கிறேன். ஆயினும் திருப்பூர், திருநாவலூர் போன்ற இடங்களிலே அரசியல் தலையீடு காரணமாக அதிகாரிகள் விரும்பியும் கூட அவர்கள் தகுந்த சமயத்தில் நடவடிக்கை எடுக்க முடியாத சிக்கல்கள் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரைகள் கேட்கப்பட்டன. அவர்கள் எத்தகைய அரசியல் தலையீடும் நடைபெறவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மீண்டும் ஆசிரியர் அமைப்பின் முறையீடு காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி ஆராய்ந்து பதில் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

திரு. க. இராமமூர்த்தி: விளக்கங்கள் கேட்டு ஊராட்சி மன்றத்திற்குத் தீர்மானம் செல்கிறது. அதற்குள்ளாகவே பள்ளிக் கூடங்கள் துவங்கிவிடுகின்றன. இதனால் அது அமுல்படுத்தப் படாமல் கிடப்பில் இருக்கிறது. ஓராண்டு கூட காலதாமதம் ஆகிறது. எங்கள் பஞ்சாயத்தில் கூட இப்படிப்பட்ட நிலை இருக் கிறது. 30 ஆம் தேதிக்குள் மாவட்ட கல்வி அதிகாரிக்கு அனுப்ப வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி அனுப்பா விட்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதி முறை கூட இருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவம்: ஆசிரியர்கள் மாறுதல் விஷயத்தில் பழி வாங்கும் நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாறுதல் என்பது அவசியம். ஆனால் பழி வாங்குதல் முறையிலே அது அமைந்து விடக் கூடாது என்பதுதான் இந்த அரசின் எண்ணம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் மன்றங்களில் வசிக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன் னின்ன ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்று எழுத்து மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றித் தகவல் வர வில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் 'தலையீடு' என்பது போன்ற வகையில் ஏதாவது செய்திருந்தால், அதற்கேற்ப நடவடிக்கையும் எடுத்திருந்தால், அதுபற்றி இந்த அரசுக்குத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு உறுப்பினர் ஆசிரியர்கள் சார்பில் மாநில பொதுச் செயலாளராக இருக்கிறார். அவர் என்ன யோசனையை அரசுக்குத் தெரிவித்தார் என்பது தெரிய வில்லை. அவர் என்ன யோசனையை அரசுக்குத் தெரிவித்தார் என்று அறிய விரும்புகிறேன்.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி உறுப்பினருக்கா அல்லது அமைச்சருக்கா ?

திரு. க. அறிவழகன் : 'ஆம்' என்று அமைச்சர் சொன்னார். 'ஆம்' ல் என்ன இருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உறுப்பினர் கொடுத்த புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அது தான் அந்த 'ஆம்' உக்குள் இருக்கிறது.

திரு. க. மீனாட்சி சுந்தரம் : மன்றத்திற்கு என்று தனி ஆணைக் குழு இருக்கிறது. ஏப்ரலுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு கல்வி ஆண்டுக்குள் மாறுதல் செய்ய வேண்டுமென்று ஆணை இருந்தும், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் திங்கள் கடந்த பிறகும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தலையீடு காரணமாக காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. கோடை விடுமுறை முடிவடைவதற்குள் இனி மேலாவது இதுமாதிரி விஷயங்களில் நடவடிக்கை எடுக்கும் விதத்தில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவான விதியும் அது தான். தவிர்க்க முடியாத நிர்வாகச் சிக்கல்கள் இருந்தாலொழிய, அது போல் நடைபெறக் கூடாது என்பது தான் அரசின் நோக்கம். உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமை எங்காவது ஏற்பட்டால், அதை அரசுக்குத் தெரியப்படுத்தினால், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் "சட்டமன்ற உறுப்பினர்கள் தலையீடு" என்று சொன்னார். திருப்பூரில் சீனியாரிட்டி அடிப்படையில் வழங்கப்படாததால் தான், நான் நியாயமான முறையீடு ஒன்று செய்திருந்தேன். முறையீடு செய்தால், அது தலையீடாகக் கருதப்படுமா ? திருப்பூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரை, நான் ஆசிரியர் பொதுச் செயலாளர் என்ற முறையில் தெளிவாகவே முறையீடு தந்திருந்தேன். நியாயமான முறையீடு கொடுப்பதாலேயே அதைத் தலையீடாகக் கருதி நடவடிக்கை எடுத்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலையீடு, முறையீடு என்று சொல்வதெல்லாம் அவரவர்கள் இலக்கண அர்த்தத்தைப் பொறுத்தது. அதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நியாயமான கோரிக்கைகளாக இருந்தால், அதுபற்றி கவனிக்கப்படும்.